தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

மரம் 12 மார்ச் 2012 கனி 4

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted at Batlagundu Post office on 10 th Mar. 2011

To

நீதியைச் செய்கிறவனெவனும அவரில்
பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்
1யோவான் 2:29

Postal Address:
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com

*Our Radio & TV*
SriLanka Sw25,41 Meter
Saturday 5.30P.M
Tamilan TV
Monday 6.00 A.M
Saturday 6.15 P.M

# சூசன்னா - SUSANNA



- தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியம் செய்து கொண்டு வந்த ஸ்திரீகளில் ஒருத்தி - லூக்.8:3
- தானியேல் கண்ட தரிசனத்திலே அவர் சூசான் என்னும் அரமனையில் இருந்ததாக சொல்லுகிறார் - தானி.8:2
- நெகேமியாவும் இந்த சூசான் அரண்மனையைப் பற்றி பேசுகிறார் - நெகே.1:1
- சூசன்னா என்றால் கிரேக்க வார்த்தையில் லில்லி என்று அர்த்தம்
- பாபிலோனில் சூசன்னாள் யூதனின் உண்மையும் அழகுமுள்ள மனைவியானவள்
- எஸ்தர் காலத்தில் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும் கனமும் உண்டாயிற்று - எஸ்.8:16
- தானியேல் கண்ட தரிசனங்களில் ஒன்று அவனை அச்சமயம் மீதியானியரின் ஆதிக்கத்திலிருந்த சூசனானுக்கு எடுத்துச் சென்றது - தானி.8:2

# விசுவாசியே உனக்கு...




1. என்னை (இயேசு) விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் - யோவா.11:25
2. என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் - யோவா.6:35
3. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும் - ரோ.10:10
4. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் - எபி.10:38
5. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் - எபி.11:6
6. ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது - யாக்.2:26
7. விசுவாசத்தினாலே அவர்கள் (பிதாக்கள்) ராஜ்யங்களை ஜெயித்தார்கள் - எபி.11:33
8. அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது - எபே.3:12
9. விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம் - கலா.6:10
10. அவிசுவாசியானபுருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான் - 1கொரி.7:14
11. அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? - 2கொரி.6:15
12. உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள் - 1பேது.1:9

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 139

போட்டியாளாகள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. நம்முடைய ஜீவனாகிய எவர் வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்?
2. உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவராக, என்று யார் யாரைப்பார்த்துச் சொன்னது?
3. இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க, நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே என்று எந்த சபைக்கு பவுல் எழுதுகிறார்?
4. தேவனால் விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது தாவீது எதை எடுத்து வாசிப்பான்?
5. கர்த்தர் உங்கள் இருதயங்களைத் தேவனைப் பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
6. அவர் எனக்காகப் பழிக்குப் பழிவாங்கி, ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிற தேவனானவர் என்று பாடும் தாசன் யார்?
7. உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயமா?
8. தேவனுடைய மனுஷன் கூறின வார்த்தையை எந்த ராஜா கேட்டபோது; அவனுக்கு விரோதமாய் நீட்டின கை தன்னிடமாக முடக்கக்கூடாதபடிக்கு மரத்துப்போயிற்று?
9. நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி என்று யார் யாருக்கு எழுதுவது?
10. பாகால் சலீஷாவிலிருந்து ஒரு மனுஷன் எலிசாவுக்கு எத்தனை அப்பங்களையும் தாள் கதிர்களையும் கொண்டுவந்தான்?

## பிரிவினை எதற்கு!

1. ஒரே தேவன்
2. ஒரே வேதாகமம்
3. ஒரே கர்த்தர்
4. ஒரே ஆவியானவர்
5. ஒரே விசுவாசம்
6. ஒரே நம்பிக்கை
7. ஒரே ஞானஸ்நானம்
8. ஒரே சரீரமாகிய சபை
9. ஒரே மந்தை
10. ஒரே சிந்தை
11. ஒரே ஊற்றுக் கண்
12. ஒரே மேய்ப்பன்



## FORM IV

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer`s Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai st., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher`s Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor`s Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:29.02.2012 Signature of Publisher.

சிறுவர் பகுதி

## பத்திரப்படுத்து



பொதுவாக எவைகளைப் பத்திரப்படுத்துவார்கள். வீட்டில் உள்ள பத்திரங்களை பத்திரப்படுத்துவார்கள். ஆனால் வேதாகமம் "என் மகனே, நீ என் வார்த்தைகளைக்காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரத்திரப்படுத்து. என் கட்டளைகளையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய். அவைகளை உன் விரல்களில் கட்டி அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்" என நீதிமொழிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம் (நீதி.7:1-3). மையினால் எழுதும் காகிதங்கள் ஒரு காலத்தில் காணமால் போய்விடும். ஆனால் இருதயமாகிய பலகையில் கர்த்தருடைய வேதத்தை எழுதிக்கொள்ளும்போது அது ஒருபோதும் அழிந்துபோவதில்லை. வேதத்தைக் காத்து நடக்கும்போது நீ பிழைத்துக்கொள்ளுவாய். அது உன்னை போஷிக்கும், வழிநடத்தும்.

"உமது வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது, எனக்கு அருவருப்பாயிருந்தது" (சங்கீதம்119:158)




# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
# THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 12 மார்ச் - 2012 கனி - 4


ஆசிரியருரை

## கிறிஸ்துவினிடத்தில்...
## In Christ



கிறிஸ்துவினிடத்தில் என்ன இருக்கிறது என்று அநேகர் நினைக்கின்றனர். அவர் சொல்கிறார்; "குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்" (யோவா.6:40). **முதலாவது, அவரை காணவேண்டும்.** கடவுளைக் காண மனிதன் படும்பிரயாசத்திற்கு அளவே இல்லை. ஏறாத மலைகள் இல்லை, நடக்காத தூரமில்லை, கும்பிடாத கோயில் இல்லை. ஆனாலும் அவர்களால் கடவுளை கண்டு கொள்ளமுடியவில்லை. பின்பு அவர் எங்கே இருக்கிறார்? எப்படியிருப்பார்? என்ற எண்ணம் அனைவருக்குள்ளும் இருக்கிறது. இச்செய்தியை வாசிக்கும் அன்பு நேயரே, அவரை காண அவர் கொடுத்த வேதாகமத்திற்குச் நாம் செல்லவேண்டும். ஒரு நிலம் இருக்கிறது அது யாருடையது என்று எப்படி கண்டுபிடிப்போம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நபரைசொல்லுவார்கள் அது உண்மையிலே யாருடையது என்பதை கண்டுபிடிக்க பத்திரத்தை வைத்து கண்டுபிடித்துவிடலாம் அல்லவா? அதைப்போல ஆண்டவர் இயேசுவை கண்டுகொள்ள பரிசுத்த வேதாகமத்திற்குச் செல்லவேண்டும்.

இயேசுவின் நாட்களில் பிலிப்பு என்பவன்; "நாத்தான்வேலைக் கண்டு; நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்" (யோவா.1:45). இயேசுவை பார்த்த பிலிப்பென்பவன் பெத்சாயிதா பட்டணத்தைச் சேர்ந்தவன். அவன் இயேசுவைப் பார்த்தவுடன் நியாயப்பிரமாண புத்தகத்திலும் தீர்க்கதரிசன ஆகமங்களிலும் அவரைப் பற்றி சொல்லப்பட்டிருந்தவைகளை நினைவு கூர்ந்து நாத்தான்வேலிடத்தில் இதை அறிவித்தான். பரிசுத்த வேதாகமம் அவரைப் பற்றியும் அவருடைய பிறப்பைப்

பற்றியும் நமக்குப் போதிக்கிறது. இயேசுவின் நாட்களில் பிறவிக்குருடனை அவர் கண்டு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி, நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான். ஒருமுறை பரிசேயர்கள் அவனை புறம்பாக்கினதை கர்த்தர் கண்டு; நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்; ஆண்டவரே, அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே அவன்: ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என்றான். "அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்" (யோவா.9:39).

**இரண்டாவது; அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ என்று படிக்கிறோம்.** இயேசுவை கண்டு கொண்டால் மட்டும்போதாது அவரை விசுவாசிக்கவேண்டும். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" என வாசிக்கிறோம் (யோவா.3:16). தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாக அவனை இரட்சிக்க வந்தார். அவர் ஒரு மத ஸ்தாபகர் அல்ல. உங்களையும் என்னையும் உண்டாக்கினவர். அவராலே நாம் வாழுகிறோம். அவர் இல்லாமல் பூமியில் ஒரு அணுவும் அசையாது. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். சகலமும் அவருக்குக் கட்டுப்பட்டு இருக்கிறது. அவரை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்று குறிப்பிடுகிறார். இன்றைக்கு வாழ்க்கையில் தோல்வியையே சந்தித்துக்கொண்டும், நிம்மதியற்றும் வாழ்ந்துகொண்டு இருக்கிற கோடானகோடி ஜனங்களை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் ஓ தாகமாயிருக்கிறவர்களே தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். அவரை விசுவாசிக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான். மேலும், "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்றார் (யோவா.11:25). இதை ஆண்டவர் இப்பூமியில் இருந்த நாட்களில் செய்து காட்டினார். மரித்து நான்கு நாட்களான லாசருவின் கல்லறைக்குச் சென்று கல்லை புரட்டிப்போடுங்கள் என்று சொல்லி லாசருவே வெளியே வா என்றார் மரித்தவன் உயிரோடு எழுப்பப்பட்டான். உலகத்தில் இதுவரை நடைபெறாத சம்பவங்கள் இயேசுவின் நாட்களில் நடைபெற்றது. அவரை விசுவாசிக்கிறவர்கள் மரித்தாலும் பிழைப்பார்கள் என காண்கிறோம். அன்பு நேயரே, நீ அவரை விசுவாசிக்கிறாயா, அவர் உனக்காக தம் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்.

**மூன்றாவதாக; அவன் நித்தியஜீவனை அடைவதும் என்று சொல்கிறார்.** அப்படியென்றால், கெட்டுப்போகாமல் அவனை காப்பாற்றி நித்திய



கட்டளையிட்டுள்ளார் (அப்.20:7; 1கொரிந்தியர்16:1,2) எனவே ஓய்வுநாள் (சனிக்கிழமையாகத்தான்) இன்னமும் இருக்கிறது. அது ஞாயிற்றுகிழமையாக (வாரத்தின் முதல் நாளாக) யாராலும் ஒருபோதும் மாற்றப்படவில்லை, மாற்றவும் முடியாது.

7. கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளில் ஆராதிக்காமல் ஏன் வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்க வேண்டும்?

அ) ஏனெனில், கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் வாரத்தின் முதல் நாள் (மத்.28:1) "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதல் நாள் விடிந்து வருகையில்... தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" (வச.1,6).

ஆ) கிறிஸ்து தமது ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையை (ரோம.16:16) வாரத்தின் முதல் நாளில் (பெந்தகோஸ்தே நாளில்) தான் ஸ்தாபிதம் பண்ணினார் (அப்.2:1-4,37-47) பெந்தகொஸ்தே நாள் என்பது 7 ஓய்வு நாட்கள் முடிந்து வாரத்தின் முதல் நாளாகும். இந்தப் பண்டிகை பழைய ஏற்பாட்டில் வாரங்களின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது (லேவி.23;15,16; உபா.16:8-12).

இ) வாரத்தின் முதல் நாளில் ஆராதனையில் கர்த்தருடைய பந்தி அனுசரிக்கப்பட்டது (அப்.20:7)

ஈ) வாரத்தின் முதல் நாளில் தான் (முதல் நாளில் மட்டும்) கர்த்தருக்கென்று காணிக்கை செலுத்தப்பட்டது. அது கட்டளையாகவும் கொடுக்கப்பட்டது (1கொரி.16:1,2).

உ) யோவான் ஆவிக்குள்ளான நாளே வாரத்தின் முதல் என்பதற்கு ஆதாரமாக, வெளி.1;10-ல் வரும் "கர்த்தருடைய நாள்" எனும் பதமும் 1கொரி.11:20-ல் வரும் "கர்த்தருடைய இராப்போஜனம்" எனும் பதமும் அப்.20:7க்கு உறுதியளிக்கிறது.

மேற்குறித்த காரணங்களால் கிறிஸ்தவர்கள், உண்மை கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய நாளாகிய வாரத்தின் முதல் நாளில் ஆராதிக்கின்றனர்.

8."ஞாயிற்றுக் கிழமைதான்" வாரத்தின் முதல் நாள் என்பதற்கு ஆதாரமுண்டா?

வசனம் நேரடியாக அப்படிச் சொல்லவில்லை. நாட்காட்டிகள் பகுத்தவர்கள் மூலம் ஞாயிற்று கிழமையை உலகளாவிய விடுமுறை நாளாக அறிவித்திருப்பது மிகப் பெரிய சான்றாகும். ரஷ்ய மொழியில் ஞாயிற்றுகிழமைக்கு "உயிர்த்தெழுந்த நாள்" என்று நேரடியாக பொருள் கொடுக்கப்படுவதாக பெயரிடப்பட்டுள்ளது. மேலும் கிறிஸ்து பிறப்பதற்கு முன் கிறிஸ்து பிறந்த பின் எனும் யுகங்களின் (வருஷங்களின்) பகுப்பும் கிறிஸ்தவத்துக்கும் அதன் தொழுகை முறைக்கும் ஒரு சான்று.

9.அப்படியானால் பழைய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணம் நம்மை கட்டுப்படுத்தாதா?

இல்லை, கட்டுப்படுத்தாது. ஏனெனில்; அ) பழைய ஏற்பாட்டின் அனைத்து கட்டளைகளையும், புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலம் இயல்பாக நிறைவேற்றுகிறோம் (மத்.5:17-48). உதாரணமாக கொலை செய்யாதிருப்பாயாக எனும் பழைய பிரமாணத்தை, கோபப்படாதே எனும் கிறிஸ்துவின் பிரமாணத்தை கைக்கொள்வதன் மூலம் இயல்பாக கொலை செய்யாதவனாக ஒருவன் மாறுகிறான். ஓய்வு நாள் கட்டளை மட்டும் இன்று அமலில் இல்லை.

ஆ) நியாயப் பிரமாணத்தால் ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை (கலா.3:10). ஏனெனில், நியாயப்பிரமாணம் விசுவாசத்துக்குரியதல்ல (கலா.3:12).

இ) நமக்கு புதிய பிரமாணம் கையளிக்கப்பட்டுள்ளதால் பழைய பிரமாணத்துக்கு இடமில்லை (எரே.31:31,32; எபி.8:7-13). கிறிஸ்தவர்கள் ஆராதிப்பது ஓய்வுநாளிலா? இல்லை. வாரத்தின் முதல் நாளில்.

ஈ) இதினால், விசுவாசத்தினாலே நியாயப்பிரணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல, நிலை நிறுத்துகிறோம் (ரோம.3:31).

# கிறிஸ்தவர்கள் ஆராதிப்பது ஓய்வு நாளிலா?

யாத்திராகமம் 20:8–11

*E.A.Arumugam*

-சென்ற மாத தொடர்ச்சி

4.ஓய்வுநாட்கள் எப்பொழுதெல்லாம் அனுசரிக்கப்பட்டன?

1.ஒவ்வொரு வாரத்தின் ஏழாம் நாளும், அனுசரிக்க கட்டளையிடப்பட்டது? (யாத்.20:10).

2. ஒவ்வொரு ஏழாம் மாதம் முதலாம்தேதி சபைகூடும் ஓய்வுநாளாக அனுசரிக்கும்படி கட்டளை கொடுக்கப்ட்டது (லேவி.23:24)

3. ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முதல்நாள் துவங்கி ஏழாம் வருஷம் கடைசிநாள் வரை இஸ்ரவேலர் அனுசரிக்கும்படி ஓய்வுவருஷம் கட்டளையிடப்பட்டது (லேவி.25:8-19).

4. ஓசியா 2:11-ல் தேவன் எதையெல்லாம் ஒழியப்பண்ணுவதாகக் குறிப்பிட்டார்?

இஸ்ரவேலின் (அவளின்) எல்லா
1. மகிழ்ச்சியையும்
2. பண்டிகைகளையும்
3. மாதப் பிறப்புகளையும்
4. ஓய்வு நாட்களையும்
5. சபைகூடுகிற எல்லா ஆசரிப்புகளையும்.

5. ஏழாம் நாளாகிய ஓய்வுநாளையும் தேவன் ஒழியப்பண்ணினாரா? அல்லது அதை மட்டும் விடுவித்து மற்ற ஓய்வுநாளை மட்டுமே ஒழியப்பண்ணினாரா?

ஏழாம் நாள் ஆசரிப்பு சபையாரின் போதனை இது. மோசேயின் பிரமாணம் வேறு. கர்த்தரின் பிரமாணம் வேறு என்றும், மோசேயின் பிரமாணம் "சடங்காச்சாரப் பிரமாணம்" கர்த்தரின் பிரமாணம் நித்திய பிரமாணம் என்றும் போதிக்கின்றனர். அந்த மோசேயின் சடங்காச்சாரப் பிரமாணத்தையே கர்த்தர் ஒழியப்பண்ணுவதாகக் குறிப்பிட்டார் என்கின்றனர். இவர்கள் இரண்டு உண்மைகளை அறியவேண்டும்.

அ) கர்த்தரின் பிரமாணமும் மோசேயின் பிரமாணமும் ஒன்றே (லூக்.2:22-24; உபா.4:1-2).

ஆ) "ஓய்வு நாளை" என்று ஒருமையில் சொல்லாமல் "ஓய்வுநாட்களை" ஒழியப்பண்ணுவேன் என்று பன்மையில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அவளுடைய (இஸ்ரவேலின்) "எல்லா" மகிழ்ச்சி பண்டிகைகள், மாதப்பிறப்புகள் என்று ஆரம்பிக்கும் போது "எல்லாவற்றையும்" என்று முடிக்கும் போதும் "எல்லா ஆசரிப்புகளையும்" என்றும் கூறப்படுகிறது. எனவே மோசேயின் நியாய பிரமாணத்தில் கூறப்பட்ட சடங்காச்சாரப் பிரமாணத்தின் படியான ஓய்வுநாளை மட்டுமே ஒழியப்பண்ணினார் என்று கூறுவது அவர்களின் அபத்தம். ஓசியா 2:11-ன் நிறைவேற்றம் கொலோசெயர் 2:13-17-ல் நிறைவேறியதாகக் கூறப்படுகிறது. ஓய்வு நாட்கள் உட்பட அனைத்து ஆசரிப்புகளும், பண்டிகைகளும், நிழலாக இருந்தவை. அவற்றின் நிஜப்பொருள் கிறிஸ்து (கொலோசெயர் 2:16,17). நிஜமாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொள்ளாமல், ஓய்வு நாளைக் கொண்டாடுவோர் நிழலை பற்றிக் கொள்வதில் விருப்பமாயிருக்கின்றனர்.

6. கிறிஸ்தவர்களுக்கு ஓய்வுநாளாக ஞாயிற்றுக்கிழமை மாற்றப்பட்டதா?

இப்படியொரு கருத்தை கத்தோலிக்க சபை பரப்பியுள்ளது. கான்ஸ்டன் டைன் எனும் ரோம சக்கரவர்த்தியால் இப்படி மாற்றப்பட்டதாக கூறப்படுவதுண்டு. ஓய்வுநாளை சனிக்கிழமையாகக் கொண்டால், ஞாயிற்றுக்கிழமை வராத்தின் முதல்நாள். இஸ்ரவேலருக்கு வராத்தின் ஏழாம்நாளான ஓய்வுநாளை ஆராதிக்கக் கட்டளையிட்ட தேவன் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவர்களுக்கு வாரத்தின் முதல்நாளில் ஆராதிக்கும்படி



வாழ்வுக்குள்ளாக கொண்டு சேர்க்கிறார். “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்” என யோவா.3:36-ல் காண்கிறோம். சீஷர்கள் கூட ஒரு முறை எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றனர். இன்றைக்கு தேவைகளுக்காக இயேசுவைப் பின்தொடர்கிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய வாழ்க்கையில் ஏதாவது செய்யவேண்டுமென விருப்பங்கொள்கின்றனர். உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விலைகொடுத்து வாங்கிவிடலாம் ஆனால் நித்திய ஜீவனை விலை கொடுத்து வாங்கிவிடமுடியாது, நித்தியஜீவனை சுதந்தரிக்க இயேசுவை விசுவாசிக்கவேண்டும். அதைத்தான் மேலுள்ள வசனத்தில் தியானித்தோம். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான் என்று நம்ஆண்டவர் குறிப்பிடுகிறார். நீங்கள் அவரில் விசுவாசமுடையவர்களாக இருக்கின்றீர்களா? அழிந்துபோகிற காரியங்களுக்காக அவரில் விசுவாசம் கொள்ளாதிருங்கள். நிலைத்திருக்கிற காரியங்களுக்காக அவரை விசுவாசியுங்கள். பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளை நாடுங்கள். கர்த்தருடைய வாக்குத்தத்த வசனத்திற்காக காத்திருக்கிறோம் என்று அநேகர் சொல்லக்கேள்விப்பட்டிருப்பீர்கள். கர்த்தர் அவரை பின்பற்றுகிறவர்களுக்கு நிலையான வாக்குத்தத்தம் ஒன்றை கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால் “நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்” (1யோவா.2:25). இந்த வாக்குத்தத்தத்தைப் பெறுவதற்கு பணம் இருந்து பிரயோஜனமில்லை, வசதிவாய்ப்புகள் இருந்து பிரயோஜனமில்லை, கல்வி அந்தஸ்து இருந்து பிரயோஜனமில்லை மாறாக உங்களில் விசுவாசம் காணப்படவேண்டும். அது நீங்கள் நித்தியஜீவனை பெற உங்களை தகுதிப்படுத்தும். ஜெபிப்பதற்கு மற்றவர்களை நாடுகிறோம். மேலும் நம்முடைய தேவைகளுக்கு மற்றவர்களை நாடுகிறோம். இங்கே பேதுரு; ஆண்டவரை நோக்கி, “ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே” என்றான் (யோவா.6:68). உங்களுடைய நம்பிக்கையைக் கர்த்தரிடத்தில் வையுங்கள். கணக்கில்லா ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வீர்கள்.

**நான்காவதாக; “நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும்”** என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் அவர் நம் எல்லோரையும் கடைசி நாட்களில் உயிரடையச் செய்வார். மனிதர்கள் மரித்தபின்பு எங்கே போகிறார்கள். மண்ணுக்குள் புதையுண்டு போகிறார்கள். அப்படி புதையுண்டு போகிறவர்கள் கர்த்தரில் விசுவாசமுள்ளவர்களாய் மரிப்பார்களேயானால் ஒரு நாளில் ஆண்டவர் வரும்போது அவர்கள் எழுப்பப்படுவார்கள் என வேதம் போதிக்கிறது. “கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்” என்று 1தெச.4:16-ல் படிக்கிறோம். மரித்தோர் எப்படி

எழுந்திருப்பார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடு வருவார்கள்? என்றெல்லாம் கேள்விகள் எழும்புகிறதல்லவா! அதற்கு பவுலின் பதில் என்னவென்றால்; ''புத்தியீனனே, நீ விதைக்கிற விதைசெத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே'' என்கிறார் (1கொ.15:36). அதைப்போல கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கிறிஸ்துவின் வருகையில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். ''எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' (1கொ.15:52). இந்த விதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா? அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் எழுப்பப்படுவார்கள்.

**ஐந்தாவதாக; ''என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்''.** இயேசுவினுடைய விருப்பம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதாயிருந்தது. அவருடைய சித்தத்தை நிறைவேற்ற தம்மை முழுமையுமாக ஒப்புக்கொடுத்தார். பேதுரு ஒருமுறை ஆண்டவருடைய வார்த்தைகளைகேட்டு இது உமக்கு நேரிடக்கூடாதே என்றான். அதற்கு அவர்; ''பேதுருவைப் பார்த்து; எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய்; தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்'' (மத்.16:23). அநேகருடைய சிந்தை இப்படிப்பட்டதாக தான் இருக்கிறது. ஆனால் ஆண்டவருடைய விருப்பமெல்லாம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறதாயிருந்தது. அவர் ஜெபிக்கும்போது கூட ''உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்'' (மத்.26:42). மூன்றுமுறையும் அப்படிஜெபித்தார். நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை அவருடைய வசனத்தின் மூலம் கண்டு அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு நித்திஜீவனை கொடுப்பார். அது மாத்திரமல்ல உங்களை அவருடைய வருகையின்போது உயிரோடு எழுப்புவார்.

**இயேசு தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளுவாரா?**

உலகத்தில் புறம்பே தள்ளும் கூட்டம் இருக்கிறது. ஆனால் இயேசு தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளார். ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை'' என்கிறார் (யோவா.6:37). இச்செய்தியில் நாம் தியானித்தபடியாக பிறவிக்குருடனை பரிசேயர் புறம்பாக்கிப்போட்டார்கள். அதைக் கண்ட கர்த்தர் அவனிடம் சென்று நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படி அவர் யார் என்றான். நீ அவரை கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார் உடனே அவன்; ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று அவரைப் பணிந்துகொண்டான். அதைபோல பாவியாகிய ஒரு ஸ்திரீயை எல்லாரும் புறம்பாக்கிப்போட்டார்கள். அப்பொழுது உங்களில் பாவமில்லாதிருக்கிறவன் முதலாவது இவள் மீது கல்லெறியக்கடவன் என்றார்.



மாற்றமில்லை, கவனிப்பாரில்லை. அப்பொழுது எலியா அந்த பலிபீடத்தை சுத்தம் செய்து பலியிட ஆயத்தம் செய்து அதன் மேல் தண்ணீரை ஊற்றி முழுவதுமாக ஈரமாக்கி கர்த்தரை நோக்கி கூப்பிட்டார். வானத்திலிருந்து அக்கினி வந்து பலியை சுட்டெரித்து சுற்றி ஓடின தண்ணீரையும் நக்கிப்போட்டது. இவ்விதமான ஒரு வித்தியாசத்தை எலியா காண்பித்தார். நீங்களும் நானும் ஒரு பெரிய விசுவாசியாக மாறவேண்டுமானால் சமுத்திரத்தின் உயர்ந்த அலையைப்போல விசுவாசம் வேண்டுமானால் சவாலான வாழ்க்கை தேவை. நாம் ஆராதிக்கிற தேவன் பேரில் உள்ள நம்பிக்கையை அவருக்கு செய்யும் ஆராதனையிலே நாம் காண்பிக்க வேண்டும். அவன் தேவன் பக்கமாய் நின்றான் என்று முதலாவது கண்டோம். இரண்டாவது அவன் தேவனுக்கேற்ற பலியை செலுத்தினான் என்று காண்கிறோம்.

மூன்றாவதாக தேவன் அல்லாதவைகள் எதுவென்றும் தேவன் யார் என்கிற வித்தியாசத்தை ஜனங்களுக்கு நிருப்பித்தான். அதனால் ஜனங்களைப் பார்த்து எத்தனைக் காலத்திற்கு இரண்டு நினைவுகளால் குந்தி குந்தி நடப்பீர்கள்! யெகோவா தேவனானால் அவரை மட்டும் சேவியுங்கள் என்றான். நீங்கள் யாரை சேவிக்கிறீர்கள்?



## ஒரு பெண்ணின் சாதனை அறிவீர்களா!

ஆயிரக்கணக்கான பாஷைகளில்
பரிசுத்த வேதாகமத்தை
மொழிபெயர்க்கக் காரணமாயிருந்தவர்
சகோதரி மேரி ஜோன்ஸ் ஆவார்.
உலகிலுள்ள 6500
பாஷைகளில் 2500 பாஷைகளில் பரிசுத்த
வேதாகமம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



## நடப்புச் செய்திகள்

- ஆண்டுக்கு 5லட்சம் ரூபாய் வரை ஊதியம் பெறுவோர், நடப்பு 2011–2012–ம் நிதி யாண்டிற்கும் வரி தாக்கல் செய்வதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- ஓரினச் சேர்க்கை ஒழுக்கக் கேடானது; இயற்க்கைக்கு எதிரானது என, சுப்ரீம் கோர்ட்டில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.
- 20 ஆயிரம் தெரு விளக்குகளுக்கு சூரிய சக்தி மின்சாரம், 1,900 மின் நிலையங்களை அமைக்க தமிழக அரசு முடிவு.
- "தஞ்சை தமிழ் பல்கலை மூலம், திருக்குறள் சீன மொழியில் மொழிபெயர்க்கப்படும்" என அதன் துணைவேந்தர் திருமலை தெரிவித்துள்ளார்.
- ரயிலில் பெண் பயணிகள் பாதுகாப்புக்கு விரைவில் பெண் போலிசார் நியமனம்.

அன்புசெலுத்தி அவருக்குப்பிரியமாக நடந்தார். அதனால் தேவன் ‘எலியாவின் தேவன்’ என்று அழைக்கப்பட வெட்கப்படவில்லை. நாமும் எலியாவைப் போல வாழ்ந்தால் நம்மையும் தேவன் தெரிந்து கொண்டு நமக்கு செவிகொடுப்பார். எலியா வாழந்த காலமோ இருண்ட காலமாக இருந்தது. இஸ்ரவேலிலே ஆகாப், என்ற ராஜா இஸ்ரவேலுக்கு வெளியே உள்ள ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணினான். அந்நிய பழக்க வழக்கங்களையெல்லாம் இஸ்ரவேலுக்குள் கொண்டு வந்தாள். கர்த்தருக்கு பிடிக்காத அருவருப்பான பாகால் வணக்கத்தை இஸ்ரவேலுக்குக் கற்றுக்கொடுத்தாள். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் கெட்டு சோரம் போனார்கள். கர்த்தரை தேடும்படியாகவும் அறியும்படியாகவும் மக்கள் இல்லை. ஒரு தேசம் இராஜாவினால் கெட்டுப்போன நிலையிலே எலியா அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது எலியா தனக்கும் தன் தேவனுக்கும் அவர்கள் வணங்கும் பாகாலுக்கும் வித்தியாசத்தை காண ஆரம்பித்தான். எதை செய்தால் என்ன பலன் வரும்? எதை தட்டினால் எது கிடைக்கும்? எங்கு போனால் என்ன ஆதாயம் என்றெல்லாம் நாம் அறிந்துள்ளோம். அதுபோல யாரை வெறுத்தால் தேவன் நம்மேல் பிரியமாயிருப்பார் என்று நாம் அறிந்து உலகத்தை வெறுத்து வாழவேண்டும். எதை ஆராதித்தால் தேவன் நம்மை அருவருப்பார் என்ற வேறுபாடு நமக்கு தெரியவேண்டும். எலியாவோ தன் வாழ்க்கையில் முதலாவது தன் தேவனுக்கும் பாகாலுக்கும் உள்ள வேறுபாட்டை நன்றாய் அறிந்திருந்தான். எல்லா மனுஷரும் தேவனுக்கு விரோதமாய் சென்றுவிட்ட வேளையிலே யேகோவாவுக்கு பக்கமாக எலியா நின்றார்.

2இரா.19:10; நான் ஒருவன் மாத்திரம் மீதமாயிருக்கிறேன். எலியாவின் கணக்குப்படி எல்லாரும் கெட்டுப்போய் மெய் தேவனை வெறுத்து பாகாலை ஆராதிக்கிறவர் என்று சொன்னார். விசுவாசியே மலை போன்ற விசுவாசத்தைப் பெற்றக் கொள்ள மலையைப் பெயர்த்தெடுக்கும் விசுவாசத்தை பெற்றுக்கொள்ள என்ன செய்யலாம்? தேவன் பக்கமாய் நின்றால் போதும். தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்ய வேண்டும், தேவனற்றதையெல்லாம் வெறுத்துத்தள்ள வேண்டும்.

எலியாவும் அதைத்தான் செய்தார். ஒரு தேசத்தை வெறுத்துக் கொண்டு தேவன் பக்கமாய் எலியா நின்றார். அது மட்டுமல்ல எல்லாரும் பாகாலை வணங்கும் போது அந்த பாகால் வணக்கக்காரர்களுக்கு முன்பாக சவாலை கொடுக்கிற தைரியசாலியாக இருந்தான். எலியாவின் வாழ்க்கையிலே அது ஒரு திருப்பு முனையாக மிகவும் முக்கியமான காலம். ஏறக்குறைய 400 பேர் சேர்ந்துகொண்டு பாகால்தான் ஜீவனுள்ள தேவன் என்று சாதித்துக்கொண்டிருந்தார்கள். உடனே எலியா அந்த ஜனங்களை ஒரு பலிபீடத்தை கட்ட சொல்லி அவர்களை பாகாலை அழைக்க சொன்னார். அப்படியே ஒரு நாள் முழுதும் பலியிட்டு உடலை கீறிக்கொண்டு இரத்தம் வடிய சுற்றி வந்தார்கள். பதில் ஒன்றுமில்லை,



உடனே எல்லாரும் அவளை விட்டுப்போய்விட்டார்கள். அவளை மன்னித்து அனுப்பினார். நாமெல்லாரும் பாவிகள் என்பதை கர்த்தர் அறிகிறார். நாம் அவரை நோக்கிப் போகும்போது அவர் நம்மை ஏற்றுக்கொள்கிறார். நீங்கள் அவரைக் கண்டு கொண்டு அவரிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**இலங்கை ஆசியசேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.30 முதல் 5.45 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**

**மேலும்**



**www.thewordofchristindia.com இணையதளத்தில் ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ வழங்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், வானொலி நிகழ்ச்சிகளையும்**

**24 -ங்கு மணிநேரமும் பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்.**

### வேதஅறிவுப்போட்டி எண் 138–ன் விடைகள்

1. பவுல் - 1கொரி.3:10
2. கனம் - லேவி.19:32
3. தீத்துவைக் - 2கொரி.2:13
4. முத்துப்போலவும் - எண்.11:7
5. பொறாமைகொள்ளாமலும் - கலா.5:26
6. மன்னா - உபா.8:3
7. ஆம் - எபே.5:20
8. சமாதானம் - யோசு.11:19
9. பவுல் - பிலி.3:14
10. சிம்சோன் - நியா.15:1


### வேதஅறிவுப்போட்டி எண் 138–ல் தேற்ச்சிபெற்றவர்கள்

1. Sis.ஜாய் வாசுகி - செட்டிபாளையம்
2. A.ரெபேக்காள் - மதுரை
3. Tmt.மரகதம் திரவியம்- கோம்பை
4. T.ராஜாத்தி - கோம்பை
5. M.சாலொமோன்தேவகிருபை- கொடைக்கானல்
6. K.அசோக் மேதா - மதுரை
7. P.ஜெய்வீணா ஆம்ஸ்ட்ராங்- சின்னசேலம்
8. M.வேலு - வடபுதுபெட்
9. Mrs.கிரேஸ் ஸ்டெல்லா - சென்னை
10. N.ஜான் செல்லையா - மதுரை
11. N.கமலவேணி - சென்னை

## பொது அறிவு சோதனை

1. சிந்து சமவெளி மக்கள் வழிபட்ட தெய்வம்?
அ) பிரம்மா ஆ) பசுபதி இ) விஷ்னு
2. அதிகமாக நெல் உற்பத்தி செய்யும் நாடு எது?
அ) தாய்லாந்து ஆ) வங்கதேசம் இ) ஜெர்மனி
3. வேகம் காட்டும் கருவியில் பயன்படுவது?
அ) மின்காந்தம் ஆ) காந்தம் இ) வட்டு
4. கதிர்வீச்சு அளவின் அலகு யாது?
அ) ராண்ட்ஜன் ஆ) கியூரி இ) ஆம்பியர்
5. சூரிய ஒளியிலிருந்து அதிக மின் உற்பத்தி செய்யத் தகுந்த பகுதி?
அ) பாலைவனம் ஆ) அயன மண்டல பகுதி இ) பூமத்திய ரேகை

விடைகள்: 1.ஆ 2.அ 3.ஆ 4.அ 5.இ




# விதிகளின்படி ஜெபித்தல்

## Praying According to the Rules

***J.C.Choate***

ஜெபம் என்றால் என்ன? அது வேறொன்றுமல்ல மனோதத்துவ ரீதியாக மனதுக்கு கிடைக்கும் ஆறுதல் மட்டுமா? அல்லது பக்தி மார்க்கத்தில் செய்யப்படும் ஒரு வெற்றிப் பயிற்சியா? அல்லது கிறிஸ்தவர்களின் ஆன்மீக வாழ்வில் உண்மையும் சத்தியமுமுள்ள வல்லமையா?

**நாம் யாரிடம் ஜெபிக்கிறோம்?**

கேள்விகளுக்கு சரியான பதில் கிடைக்கும்படி நாம் வேதவசனங்களைப் படிக்க வேண்டும். ஒரு குழந்தை தகப்பனிடம் சொல்லும் வேண்டுகோளாக இதை புதிய ஏற்பாடு படம்பிடித்துக் காட்டுகிறது. இயேசுவானவரின் சீடர்கள் அவரிடம் ஜெபம் பண்ணக்கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டபோது அவர் எங்கள் பிதாவே என்று துவங்கினார்... வார்த்தையானது தேவ மைந்தனாகவும் மனித குமாரனாகவும் தேவ பிள்ளைகளின் குடும்பத்தில் முதலாவதாக பிறந்த போது நாம் தேவனுக்கு முன்பாக பிதாவே என்று வரக்கூடிய வழியை நமக்குத் தந்தார்.

**யார் மூலம் ஜெபிக்கிறோம்?**

நம்முடைய பாவச் சுவற்றினால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்ட பாவம் நிறைந்த மனிதர்களாக நாம் இருந்தபோதிலும் விசுவாசத்தில் நாம் தேவனிடம் திரும்ப வருகிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும் (எபிரெயர் 11:6). அவருடைய குடும்பத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு (1கொரிந்தியர் 12:13) அவருடைய குமாரனுடைய இரத்தத்தால் கழுவப்படுதல் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர்6:3,4). ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் (எபிரெயர்4:16).

ஆனால் நாம் யார் மூலமாய் பிதாவிடம் சேருகிறோம். இயேசு சொன்னார் நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும் படியாக அதைச் செய்வேன் நமக்காக பரிந்துபேசுகின்ற நம் சகோதரரைத் (இயேசு) தவிர நமக்குப் பிதாவினிடத்தில் சேருகின்ற வேறு எந்த வழியும் கிடையாது ஆகவே





# எலியாவின் தேவன் எங்கே?

## Where is the God of Elijha?

*-Selected*

"ஒரு விளக்கை ஏற்றி இன்னொரு விளக்கையும் எரியச் செய்யலாம்" ஒருவர் ஓசன்னா கூறினால் இன்னொருவரும் ஓசன்னா கூற முடியும். "விசுவாசம் விசுவாசத்திலிருந்து புறப்படுகிறது" ஒரு விசுவாசி இன்னொரு விசுவாசியை உருவாக்கிட முடியும். விசுவாசமுள்ள வார்த்தை சோர்ந்து போன இருதயத்தை விசுவாசமடையச் செய்ய முடியும்.

நம்மைப் போல சாதாரணமான மனிதன் எலியா எப்பேர்பட்ட விசுவாசமுள்ளவனாக இருந்தான் என்பதை ஆராய்ந்து நம்முடைய வாழக்கையிலும் விசுவாசத்தை அடையும்படி முயற்சி செய்வோம். யாக்.5:17,18-ல் எலியா என்கிற ஒரு மனிதனைக் குறித்து படிக்கிறோம். அவன் ஒரு தேவதூதன் அல்ல. ஆனால் அவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷன் சராசரியான மனுஷன். நாமும் நம்மை ஒப்பிட்டு பார்க்க விரும்பினால் நம்மைப்போல நமக்கு சமமானவனோடு ஒப்பிட்டு பார்ப்பதில் தவறே கிடையாது. ஏனென்றால் எலியா நம்மை போல ஒரு பாடுள்ள மனுஷன். இன்றைக்கு நம்முடைய பாடுகள் "தேதிகளால் முழுவதும் நிறைந்துள்ள காலாண்டரைப்போல உள்ளன" பெட்டிப் பெட்டியாக எண்ணிக்கையில்லாத பாடுகள், துன்பம், கடன், வியாதி, அவமானங்கள் நிறைந்துள்ளது.

நம்மைப்போல பாடுள்ள மனுஷனிடத்திலிருந்து விசுவாசத்தைக் கற்றுக்கொள்ள முடியுமா? எலியாவுக்கு ஒரு சீஷன் இருந்தான். அவன் பெயர் எலிசா. எலியாவின் தேவன் எங்கே? என்று கேட்டான் (2இரா.2:14). இன்றைக்கு நாமும் நம்முடைய இருதயத்திலே எலியாவின் தேவன் எங்கே என்று கேட்போமா?

எலியாவின் தேவன் எப்படிப்பட்டவராக இருந்தார். ஆனால் எலியாவோ நம்மைப்போல பாடுள்ள மனுஷன் என்று அறிவோம். அவனுடைய ஜெபத்தை கர்த்தர் கேட்டார். மழை பெய்யக்கூடாது என்று கேட்டான் மூன்றரை ஆண்டுகளுக்கு மழை பெய்யவில்லை. மீண்டும் மழை பெய்யும்படி வேண்டினான். மழை பெய்தது. சாதாரணமான மனுஷன் ஜெபத்தின் மூலம் தேவனோடு வாழ்ந்திருக்கிறான். அந்த எலியாவின் தேவன் எங்கே?

அருமையான சகோதரியே, உங்களுடைய வாழ்க்கையில் எலியாவின் தேவனை தெரிந்து கொண்டால் உன் வாழ்க்கை மாறிவிடும். துன்பங்கள் நீங்கும் சமாதானத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

எல்லா மனுஷனும் தேவனுக்கு பிரியமாக இல்லை. ஆனால் எல்லா மனுஷனும் தேவனோடு நடக்க முடியும். சிலர் மாத்திரமே அப்படியிருந்திருக்கிறார்கள். எலியாவோ தேவனுக்கு பயந்து கீழ்ப்படிந்து

ஒவ்வொன்றிற்காக வார்த்தைகளில் நன்றி கூறுதலோடு அடுத்த விண்ணப்பங்களை முன்வைப்போமானால் நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துவதில் அது எப்பேர்பட்ட ஔஷதமாயிருக்கும்!

முந்தையநாட்களில் உதவினதும் பராமரித்ததுமான உண்மையான ஒவ்வொன்றையும் நன்றிகூறுதலில் பட்டியலிடுவோமென்றால், நம்மை பாதுகாக்கின்ற தேவனில் மகா பெரிதான விசுவாசத்தையும், தேவையான வழிநடத்துதலையும் அவர் கொடுப்பார் என மகா பெரிதான நம்பிக்கையையும், அவருடைய அநாதி அன்பின் மேல் பெரியதான உறுதியையும் பெற்றிருக்க மாட்டோமா?

அவ்வாறே நேற்று அன்புகூர்ந்து, நமக்கு செவிகொடுத்த தேவன் இன்றும் கூட நேசித்து நமக்குச் செவிகொடுப்பார் என்ற மிகுந்த உறுதியோடு மகாபெரிய விசுவாசத்தில் நாம் ஜெபிப்போம். நாம் 1யோவா.5:14,15-ல் யோவான் வெளிப்படுத்தியதை அறிந்து கொள்வோம். ''நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். யோவான் ஜெபித்தபோதே ஏற்கனவே தன்னுடைய கையில் பதிலை அவன் பெற்றிருந்தது போல அவனுடைய நம்பிக்கை மிகப் பெரியதாயிருந்தது. ''நாம் பெற்றுக்கொண்டோமென்று நாம் அறிந்திருக்கிறோம்....'' முந்தைய பதில்களுக்கு நன்றியுள்ளவர்களா யிருத்தல், அதே நம்பிக்கையுடன் கூட ஜெபிப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. வருத்தம் என்னவென்றால், கிறிஸ்தவர்களுடைய பல நல்ல ஜெபங்களுக்குப் பதில் 'இல்லை' என்பதேயாகும். 'இல்லை'என்ற அந்த பதில் தங்களுக்கு தங்களால் கொடுக்கப்பட்டது ஏனென்றால் அவர்கள் ஒருபோதும் பதிலளிக்க தேவனுக்கு வாய்ப்பளிக்கவில்லை.

அது எவ்வாறு இருந்தது? யாக்கோபு1:5-7-ல் கூறுகிறார் ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்: சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக''.

தேவன் கேட்பாரோ என்ற சந்தேகம், மிகுதியான ஜெபத்தை வீணாக்கியிருக்கிறது. சந்தேகத்தை முறியடிப்பதற்கு நாம் கொண்டிருக்கிற ஒரு ஆயுதமானது, நமது வாழ்க்கையை திரும்பிப்பார்த்து தேவனுடைய முந்தைய நாளின் பராமரிப்பையும் ஜெபங்களுக்கான பதில்களையும் எண்ணிப்பார்ப்பதுமே ஆகும். நாம் நிறுத்தி நிதானித்து அதன்பின் நமது குற்றங்களை வார்த்தையினால் அறிக்கையிட்டு நமது வாழ்வில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளும் உண்மையாகவே தேவனுடைய செயல் (யதார்த்தமாக நிகழும் அல்லது நடைபெறும் ஒன்று அல்ல) என்றும், அவருக்கு நன்றி செலுத்துவதன் மூலம் அவருடைய கவனமுள்ள பராமரிப்புக்கு நாம் காணிக்கை செலுத்துகையில் அச்செயலே அவர் இன்னும் செவிகொடுக்கிறார் என்றும், நமக்கு உதவும்படி காத்திருப்பார் என்றும் எண்ணும்படி நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது.

எனவே நன்றியுடனிருப்பது போதுமான விசுவாசத்தைப் பெற்றிருப்பதற்கு நம்மை பெலப்படுத்துகிறது. மறுபுறம் நம்முடைய வாழ்வில் நமது நன்மைக்கென்று செயல்பட தேவனை தடையின்றி அனுமதிக்கவும் செய்கிறது. அவருடைய உதவிக்காகவும், அவருடைய சுயவிருப்பங்கள் நமக்கு உதவும்படிக்கு எல்லாவற்றையும் சாதகமாக்கவும் அவருடைய கட்டளைகள் நமது வாஞ்சைகளை எவ்வளவு அழகாய் இணைக்கின்றது!



எல்லா விண்ணப்பங்களும் அவருடைய நாமத்திலேயே செய்யப்படவேண்டும்.

**நாம் எப்படி ஜெபிக்கிறோம்?**

மிகவும் அதிகமாக நாம் என்ன செய்கிறோமென்று புரியாமல் கிறிஸ்தவர்கள் ஜெபிக்கிறார்கள். தமக்காக செய்யப்படவேண்டுமென்று நினைக்கிறதை தேவனை திருப்திப்படுத்தி செய்யவைக்க முயற்சிக்கிறார்கள். நம்முடைய சித்தமே (விருப்பம்) நடக்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஏனென்றால் எது சிறந்ததென்று நமக்குத் தெரியும் என்று நாம் நினைக்கிறோம். கெத்சமனே தோட்டத்தில் இயேசுவின் ஜெபத்தில் அவர் பின் வருமாறு ஜெபித்தார்.

பிதாவே உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும் ஆகிலும் என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார் (லூக்கா22:42).

**நாம் எதற்காக ஜெபிக்கிறோம்?**

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். நம்முடைய பிதாவினிடத்தில் நம் எந்த விண்ணப்பத்தோடும், நாம் வாழ்க்கையில் சந்திக்கும் எந்தத் தேவையோடும் வரலாம். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும் அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் (1யோவான்4:14,15).

ஆனால் கேட்கிறவன் சற்றும் சந்தேகமின்றி விசுவாசத்தோடு கேட்கக் கடவன் ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் (யாக்கோபு1:6). தேவன் நமக்கு பதிலளிக்கிறார் எனபதில் நமக்குள்ள விசுவாசத்துக்கு எப்படி உதவி செய்கிறார்? நன்றியோடு ஜெபம் செய்யும்படி நம்மைத் தூண்டுகிறார் (பிலிப்பியர்4:6).

நன்றி சொல்வதற்கு தேவன் கடந்த காலத்தில் நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளித்திருப்பதை நாம் எண்ணிப்பார்த்து அவர் நமக்குச் செய்ததையெல்லாம் நினைவு கூரவேண்டும். கடந்த காலத்தில் அவர் நம்மீது கவனமுள்ளவராயிருந்தார் என்ற நினைவு தற்போதுள்ள தேவைகளை அவர் சந்திப்பார் என்கிற நம்பிக்கையை பலப்படுத்தும்.

**தேவன் எப்படி ஜெபத்திற்கு பதிலளிக்கிறார்?**

நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிப்பதற்கான வழிகள் தேவனைப் பொறுத்தவரை ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. அவர் மக்கள் மூலமாக, நிகழ்வுகளின்

மூலமாக, காலங்களின் மூலமாக, (அந்தந்த காலத்தில்) சரீர மற்றும் ஆவிக்குரிய சாதனங்கள் (வழிகள்) மூலமாக செயல்படமுடியும். அவருடைய சுய ஞானத்தில் பதிலளிக்கிறார். நாம் கேட்டதைக் காட்டிலும் முற்றிலும் வித்தியாசமான வழியில் செய்யக்கூடும். ஆனால் அவர் செய்தால் அது நமக்கு நாம் செய்வதைவிட மேலானதாகயிருக்கும்.

நமக்கு பதிலளிக்க அவர் தாமதிக்கலாம் ஏனென்றால் தாமதம் நம் விசுவாசத்தை பலப்படுத்தும். எப்படி சரீரத்தில் தாங்குவது உடல் வலிமையைக் கூட்டுமோ அப்படி.

அவர் ஒரு வேளை (நம் ஜெபத்திற்கு) முடியாது என்று பதிலளிக்கலாம் நாம் கேட்டதைக் கொடுப்பதன் விளைவை அவர் அறிய முடியும். அது நமக்கு மிகச்சிறந்ததல்ல என்பதை அவர் அறிவார். அவர் பதில் எப்படியிருந்தாலும் நம்மை (ஜெபத்தை) அவர் கேட்டார் என்றும் அவர் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளுக்கு எப்போதும் எது நன்மையோ அதையே செய்கிறாரென்பதும் நமக்குத் தெரியும்.

**நாம் அற்புதங்களை எதிர்பார்க்கலாமா?**

எல்லா காலங்களிலும் தேவன் மனிதனோடு இரண்டு வழிகளில் செயலாற்றியிருக்கிறார். அவருடைய கிருபையுள்ள செயல்கள் மற்றும் அற்புதங்கள் மூலம். தேவன் அளிக்கின்ற எந்த பதிலும் அற்புதங்கள் மூலமாகத்தான் இருக்கவேண்டுமென்று அநேகமக்கள் தவறாக நினைக்கிறார்கள். ஆனால் வேத வசனம் இதை உண்மையென்று காட்டவில்லை. அற்புதங்கள் என்பது எப்பொழுதுமே (இயற்கை) விதிகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு செய்தி கொண்டுவருபவரையோ அல்லது புதிய செய்தியையோ மறுக்க முடியாத சாட்சியமாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாடு முழுவதுமாக கொடுக்கப்பட்ட பின் அற்புதங்கள் செய்த காலம் முடிந்து போயிற்று (1கொரிந்தியர் 13:8-10).

கிருபையினால் அனைத்தும் தேவனுடைய பயன்பாட்டில் உள்ளது. கிருபையினால் கொடுக்கப்படும் பதில் அற்புதங்கள் மூலமாக கொடுக்கப்படும் பதிலை விட குறைவானதல்ல. ஆனால் அது இயற்கையின் விதிகளுக்குட்பட்டு செயலாற்றுகிற அவருடைய வல்லமையே. அதற்கு எதிரானதல்ல. வேதாகமத்தை கூர்ந்து கற்றால் கிருபையின் மூலமாக தம்பிள்ளைகளுக்கு பதிலளிப்பது எல்லா காலத்திலும் அவருடைய விருப்பத்தின்படியானதொன்றாகவே இருக்கிறது.


தமிழில் மொழியாக்கம் செய்தவர்: சகோ.G.தானியேல், சென்னை. G.Daniyal, CHENNAI.

**ஜெபியுங்கள்**

♑ இம்மாதம் நடைபெறும் தமிழக ஊழியர் கூடுகைக்காக...

♑ 24–ங்கு மணிநேர வானொலி தொலைக்காட்சி சேவைக்காக...

♑ பலவிதமான போராட்டங்களுக்கு மத்தியில் வாழும்





பெண்கள் பகுதி

# நன்றியுள்ளவளாயிரு

## Be Ye Thankful

*-Betty*

ஒருவரும் நன்றியற்ற தன்மையை புகழ்வதில்லை. வேதவாக்கியங்களும், தேவனும் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்க தேவன் விரும்புகிறார் என சுட்டிக்காட்டுகிறது. உண்மையில் அவர் நமக்கு செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும் நமது நன்றியினை அவரிடம் வெளிப்படுத்த நமக்குக் கட்டளையிடுகிறார். சில வசனங்களை நாம் வாசிப்போம்.

“தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டா யிருக்கிறது” (2கொரி.4:15).

“இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர், தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்” (2கொரி.9:12).

“நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்” (பிலி.4:6).

2கொரி.4:15 தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும் எனக் கூறுகிறது. எவ்வாறு நன்றியறிதாலானது தேவனுடைய கிருபையின் பெருக்கத்தோடு இணைக்கப்பட்டுள்ளது?

2கொரி.9:12 தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே பரிசுத்தவான்களின் குறைவுகளை நீக்குவதற்கு சம்பூரண பலனுள்ளதாக இருக்கிறது எனக் கூறுகிறது.

பிலிப்பியர்6:4 தேவனிடத்திற்கு தெரியப்படுத்துகிற நமது ஜெபங்களுக்கும் விண்ணப்பங்களுக்குமிடையே இருக்கிறது ஸ்தோத்திரம் எனக்கூறுகிறது.

ஏன் தேவன் மிகக் குறிப்பாக ஸ்தோத்திரம் செய்தலை ஊக்கப்படுத்துகிறார்? மேலும் அந்த செயல்பாடானது எவ்வாறாக அவர் நம்மிடம் காண்பிக்கிற கிருபையின் பெருக்கத்தை உண்டாக்குகிறது?

நமது இதயம் கெட்ட குழந்தைகளைப் போல தேவன் ஏற்கனவே செய்து முடித்திருக்கிறவற்றிற்கு ஒரு போதும் நன்றி கூறாமல் மேலும் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தால் நாம் தேவனைப் பிரியப்படுத்தமுடியாது. ஆனால் உமக்கு நன்றி என்று கூறுவதற்கு மேலாக தேவன் பன்மடங்கு அதிகமாக செயல்படுகிறார் என நான் நினைக்கிறேன்.

எத்தனை முறை சிலவற்றிற்காக நாம் ஜெபித்து அதைப் பெற்றுக்கொண்டு அதன் பின் முதல் ஜெபத்திற்கு பதில் கிடைக்கப்பெற்றதை நாம் மறந்து மீண்டும் வேறொரு காரியத்திற்காக ஜெபிப்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருந்திருக்கிறோம். நீங்கள் சாலைப் பிரயாணப் பாதுகாப்பிற்காக பிரயாணத்தை ஜெபத்துடன் ஆரம்பித்து அதன்பின் உங்களுடைய உரிய இடத்தை நீங்கள் அடைந்தபோது பாதுகாப்பாக நீங்கள் போய் சேர்ந்து விட்டீர்கள் என்பதை நினைப்பதற்கு எப்போதாவது தவறியிருக்கிறீர்களா? அடிக்கடி நாம் ஒரு தேவைக்காக ஜெபித்துவிட்டு, மற்றொன்றிற்குக் கடந்து செல்கின்றோமே தவிர, பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை எண்ணிப்பார்க்காமல் தொடர்ந்து கேட்டு, கேட்டு தேவன் நமது ஜெபங்களை எப்போதும் கேட்டுக்கொண்டேயிருக்கிறார் என்பது பற்றி நாம் நமக்குள்ளே சந்தேகம் கொள்கிறோம்.

நாம் நிறுத்தி நிதானமாக விண்ணப்பித்துள்ள குறிப்பிட்ட விண்ணப்பங்களில், நாம் பெற்றுள்ள குறிப்பிட்ட பதில்களை எண்ணிப்பார்த்து அதன்பின் கிடைத்த பதில்கள்